

# பரலோக பொக்கிஷங்கள்

உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!

## காத்திருக்கும் ஜெபமே, வாழ்வின் ஜெயம்!

விரைந்து ஓடி வந்து "உயிர்த்தெழுந்த இயேசுவை" காண வந்தார் பேதுரு! சிறிது நேரம் 'கல்லறையை' தேடிப்பார்த்துவிட்டு "இயேசுவை காணாமல்" மீண்டும் தன் இருப்பிடம் ஓடிவிட்டார்! (யோ.20:4,10). ஆனால், மகதலேனா மரியாளோ,"என் ஆண்டவர் எங்கே?" என தேடி, அவரைக் காணாமல் அழுது..... மருவி நின்ற அவளிடம் ஒரு தோட்டக்காரன்போல் வந்த இயேசு, விசுவாசத்துடன் தேடும் அவளின் உறுதியைக் கண்டு, தன்னை அவளுக்கு வெளிப்படுத்தினார்! (யோவான்.20:15,16).

இந்த மகதலேனா மரியாளைப்போல் தனிமையில் "கர்த்தருக்கு காத்திருப்பவர்கள் மாத்திரமே" அவரைக் காண்பார்கள்! ஆ.... அது போதுமே, நாம் புதுபெலன் அடைவோம்! கண்ணீர் துடைப்போம்! அன்று முழுவதும் அவர் சித்தம் செய்வோம்! ...... இனி அடுத்து, மீண்டும் காலையில் அவர் முகம் தேடுவோம்... அவரை கண்டடைவோம்! இந்த பாக்கியம், பொதுவான ஜெபத்தில் ஓடிவந்தவர்கள் அல்ல..... அவரைத்தேடும் 'தாபரித்த' ஜெபம் கொண்டவர்களே, அவரைக் கண்டடைந்து, நாள்தோறும் புதுபெலன் அடைவார்கள்! ஆமென்.

*-tr*

பெட்டகம் 20 | ஆகஸ்ட் 2018 | பரல்கள் 8



# ஒரு மேய்ப்பனின் இதயம் விசாலமாக வேண்டும்!

“பிலிப்பிய சபை மக்களைத் தன் இருதயத்தில் வைத்திருப்பதாக” பவுல் கூறினார் (பிலி.1:7). “தங்களுக்கென பிழைத்திருக்கிறவர்கள்” நெஞ்சத்தில், தானும்-தன் கனமுமாகிய, சுய நலமே குடிகொண்டிருக்கும். அந்த இருதயத்தில் “அருகிலிருந்து தன்னைப் பகைக்கும் அயலான் கூட” (ஏதோ தவறு செய்த சொந்த மனைவி, கணவன்கூட) இருந்திட முடியாது! பவுல் குறிப்பிடுவது போல், ஒரு ஊரில் உள்ள சபையின் மக்கள் அனைவரும் அந்த சபை மூப்பனுடைய இருதயத்தில் குடிகொள்ள வேண்டுமென்றால், அந்த இருதயம் எத்தனை விசாலம் கொண்டதாய் இருக்க வேண்டும்!? சுய-நல சுமையிலேயே இருதயம் நசுங்குண்டோர்களுக்கு **‘பிறரை சுமக்கும் பாக்கியம்’** எப்படி கிட்டும்?

ஜனங்களுக்காக நெஞ்சில் பாரமும் கரிசனையும் கொண்டிருப்பதே, கர்த்தருடைய ஊழியனுக்குரிய மாறாத பங்காயிருக்கிறது! இது இல்லாமல், பிரசங்கம் செய்ய விரும்புவதும், ஜனங்களை ஆளுகை செய்ய விரும்புவதும்.... வெறும் பரிசேயத்துவ மென்றும், அஞ்ஞானமென்றும் இயேசு குறிப்பிட்டார்! (மத்தேயு.23:1,2;லூக்கா.22:25). இவர்கள் ‘ஜனங்களுக்குள் (மந்தைக்குள்) புகுந்துவிட்ட’ கூலிக்காரர்கள், மெய்யான மேய்ப்பர்கள் அல்ல! எனவும் இயேசு திட்டவட்டமாக கூறினார்!! (யோவான்10). மந்தையைப் பாதுகாப்பதும், தன் ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுப்பதும்..... விசால இதயம் கொண்ட மேய்ப்பர்களின் பங்கு என இயேசு கூறி மகிழ்ந்தார்! ‘நானே நல்ல மேய்ப்பன்’ என உரைத்த ஆண்டவரின் அடிச்சுவடில், அனேகம் மேய்ப்பர்களை தேவன் எழுப்புவராராக!

*-Ed*


**2018 ‘பரலோக பொக்கிஷங்கள்’**

வருட சந்தா ரூ.**140.00** **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**120.00**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch

**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150

(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)


**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**

**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**


கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள்

207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India

Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306

Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, tamil.cfcindia.com

## சபையில் தேவனுடைய தரமே, உயர்த்தப்பட வேண்டும்!

*அப்போஸ்தலனாகிய பவுல் சபைகளை ஸ்தாபித்து, அற்புதங்களைச் செய்தபோது அவரோடு இணைந்திருப்பதில் அன்றிருந்த விசுவாசிகள் பெருமிதம் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் ஒரு சிறைக்கைதியாய் ஜெயிலுக்குச் சென்றபோது, அவர்களோ, அவரோடு இணைந்திருக்க விரும்பவில்லை. ஏனெனில் பவுலின் நிலையை 'வெட்கத்திற்கு உரியதாய்' கருதினார்கள். இன்றும் அவ்வாறே, பிரபல்யமான ஒரு பிரசங்கியோடு தங்களை இணைத்துக் கொள்ளவே அநேக கிறிஸ்தவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அவர் பிரபல்யம் இழந்து அல்லது புறக்கணிக்கப்படும்போது, அவர்களும் மெல்ல வெளியே வந்து விடுகிறார்கள்! ஆனால் பவுலோடு முடிவு வரை இணைந்து நின்றவர்களையே தேவன் அங்கீகரித்து, தன் சபையைக் கட்டுவதற்கு அவர்களைப் பயன்படுத்தினார். ஆம், பவுலின் பிரபல்யமற்ற நிலையில்தான் இவர்கள் சோதிக்கப்பட்டு, உண்மையுள்ளவர்கள் என நிரூபிக்கப்பட்டார்கள்!*

**அவருடைய ஊழியன் அபிஷேகம் பெற்றிருந்தும், பிரபல்யமற்றவராய் இருக்கும் நிலையில், தொடர்ந்து அவரோடிருக்கிறோமா? என்பதைக் கொண்டு, தேவன் நம்மை சோதித்துப் பார்க்கிறார்.**

*இச்சமயத்தில்தான், நீங்கள் உங்களுக்கானதைத் தேடுகிறீர்களா? அல்லது நீங்கள் தேவன் அருளிய அவரது ஊழியனுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்களா? என்பதை தேவன் கண்டறிகிறார்.*

*2தீமோத்தேயு.1:12-ல் பவுல் கூறும்போது "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயத்துமிருக்கிறேன்" என கூறினார். "**கடைசி நாள் வரை கர்த்தர் என்னைக் காத்துக் கொள்வார்**" என்ற நிச்சயத்தை பவுல் வைத்திருந்தார். முழு இருதயம் கொண்ட பவுல் அந்த வாசகத்தைக் கூற முடிந்தது! ஆனால், அந்த வாசகத்தை அரை-குறை இருதயத்தோடு வாழும் ஒரு கிறிஸ்தவன்*

*கூறுவது, அவன் தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் செயலாகும்!!*

*"ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" என பவுல் தீமோத்தேயுவிடம் எச்சரித்துக் கூறிய புத்திமதியைப் பாருங்கள். ஆங்கில மொழிபெயர்ப்பின்படி* "**கிறிஸ்தவ ஜீவியத்தின் உயர்ந்த தரத்தை குறைத்து விடாதே**" *என்றே அர்த்தமாகும்* ***(2தீமோ.1:13).*** *இந்த புத்திமதி, நம் நாட்களில் உள்ள எல்லா கிறிஸ்தவ பிரசங்கிகளுக்கும் எவ்வளவு அவசியமாயிருக்கிறது! பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது, வேத வாக்கியங்களில் காணப்படும் உன்னத தரத்தை ஒருவன் குறைத்து, அநேக ஜனங்கள் உன்னுடைய சபைக்கு வருவதற்கு வழி ஏற்படுத்தாதே! என்பதே அவருடைய புத்திமதியின் சாரமாகும். உயர்ந்த தரத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் கொஞ்சமான ஜனங்களை நீங்கள் கொண்டிருந்தால், கர்த்தருடைய பார்வையில் நீங்களே ஓர் சிறந்த சபை என்பதை அறியுங்கள்! வேத வாக்கியத்தின் தரத்தை இழந்த அநேக ஜனங்களைவிட 'கொஞ்ச ஜனங்களே' மேலானவர்கள்.*

**அதாவது, ஒத்தவேஷம் தரித்து, வேதவாக்கியங்களை அவமாக்கும் 300- ஜனங்களைவிட 3 சீஷர்களைக் கொண்ட ஒரு சபை, மகா மேன்மை கொண்ட சபை மக்களாயிருப்பார்கள்!**

*உண்மைதான், **300** ஒத்தவேஷம் தரிக்கும் விசுவாசிகளைவிட, **3** முழு இருதயம் கொண்ட சீஷர்கள், அவர்கள் வாழும் முழு கிராமத்தையும் கிறிஸ்துவுக்குள் ஈர்த்துக் கொள்ள முடியும்! இதுபோன்ற பாரமே, எந்த ஒரு உண்மையான தேவனுடைய ஊழியனும், தனக்குப் பின் வரக்கூடிய அடுத்த சந்ததியைக் குறித்த பாரமாய் கொண்டிருப்பான். கிறிஸ்தவ சரித்திரத்தில், இரண்டாவது சந்ததியாய் எழும்பி வந்தவர்கள் தரம் குறைந்தவர்களாகவே இருப்பதை அதிகபட்சமாய் காண்கிறோம்!*

*அதுஏனென்றால், அவர்களிடம் சபையின் தோற்றத்தை ஏற்படுத்தியவர்களின் 'அதே தரிசனம்' இருப்பதில்லை! அவர்களின் ஸ்தாபகர்கள் அந்நாட்களில் வைத்திருந்த தரத்தை இழந்திருக்கும், இன்றைய 'பெரிய ஸ்தாபன சபைகளை' ஒப்பிட்டுப் பாருங்கள். இன்றைய ஸ்தாபனங்களின் சபைகளுக்கு, ஆதியிலிருந்த ஸ்தாபகர்கள் இந்த பூமிக்கு மீண்டும் வந்தால், அவர்களே ஸ்தாபித்த தங்களின் 'ஸ்தாபன சபைகளுக்கு' போகமாட்டார்கள்! காரணம் என்னவென்றால், அந்த ஸ்தாபன சபைகளை, ஆரம்பித்த ஸ்தாபகர்கள் உயர்த்திப் பிடித்து, அறிவித்த வேத வாக்கியத்தின் தரத்தை, இப்போதுள்ள சபைகள் தரைமட்டமாக்கிவிட்டன! வெளித்*

*தோற்றத்தில் காணும் உபதேசங்கள் இங்கே இருக்கத்தான் செய்கிறது! ஆனால், வல்லமையும் அபிஷேகமும் அந்த சபைகளை விட்டு போய்விட்டது! 'ஜீவன்' ஓடிப்போனது.... தேவனை அறிகின்ற அறிவும் அங்கே காணோம்!*

**வேத வாக்கியங்களின் உயர்ந்த தரத்தை, நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்தாவியின் துணைக்கொண்டு நாம் காத்திட வேண்டும்! ஏனென்றால், அதுவே நம்முடைய தூய்மையான பொக்கிஷம்!**

*உங்களுடைய கம்பெனி 5 கோடி ரூபாய்களைக் கொடுத்து, அதை பெங்களூரிலிருந்து டெல்லிக்கு எடுத்துச் செல்லும்படி ரயில் வண்டியில் அனுப்பினால், அதை கவனமாய் கொண்டுச் செல்வீர்கள் அல்லவா? உங்களின் கவனம், நீங்கள் போக வேண்டிய இடத்திற்குச் சென்றதும், அந்த பண முடிப்பில் 5கோடி இருக்க வேண்டும்! அது 3 கோடியாய் இருந்துவிடக்கூடாது! இதற்கு ஒப்பாகவே நாமும் தேவனுடைய வேதவாக்கியங்களில் காணும் தரத்தைப் பாதுகாக்க வேண்டும்!* **தரம் குறையாமல்** *எடுத்துச்செல்லும் ஊழியத்தை பரிசுத்தாவியின் ஞானமும் வல்லமையும் இல்லாமல், நம்மால் ஒருவரும் நிறைவேற்றிட இயலாது!(1:14).*

*பவுல் தீமோத்தேயுவுக்கு கூறும்போது, ஆசியா நாட்டிலிருக்கிற விசுவாசிகள் "தன்னைவிட்டு விலகினார்கள்" என கூறினார் (2தீமோ.1:15). அன்று இயேசு அனுபவித்தைப் போலவே, பவுலும் தன் நாட்களில் அனுபவித்தார்! அதாவது, விசுவாசிகள் அவரைவிட்டு விலகி தங்கள் ஐக்கியத்தை பவுலிடமிருந்து முறித்துக்கொண்டார்கள்! அந்த விசுவாசிகள் இப்போது பவுலோடு இணைந்திருக்க விரும்பவில்லை! அதுஏனென்றால், இச்சமயத்தில் பவுல் சிறையிலிருந்தார். ஆகவே தங்களுக்கும், ரோமானியர்களினிமித்தம் பாடுகள் வந்திட அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, பவுலைவிட்டு தங்களை தூரப்படுத்திக்கொண்டார்கள்!*

*ஒரு காலத்தில் பவுலின் உடன் ஊழியர்களாயிருந்த* **பிகெல்லுவும், எர்மொகெனேயும்** *அவரைவிட்டு விலகினார்கள். ஆனால் ஒநேசிப்போரு பவுலோடு இணைந்திருந்தார். ஏனென்றால், ஒநேசிப்போரு பவுலின் விலங்கைக் குறித்து வெட்கப் படவில்லை! (2தீமோ.1:16). பவுல் எபேசுவில் இருந்தபோதும், அவரோடு ஊழியம் செய்தார்! இப்போது ரோமாபுரியிலிருந்த போதும், சிறைச்சாலையில் பவுலைச் சந்தித்து அவரோடு ஐக்கியம் கொண்டார். இவ்வாறு தேவனுடைய ஊழியர்களோடு* **கடைசி வரை யாதொரு ஐக்கிய சேதமில்லாமல்** *இணைந்திருக்கும் உத்தம சகோதரர்களுக்காய், கர்த்தருக்கு*

*ஸ்தோத்திரம்! பவுல் கூறும்போது "நான் ரோமாவிலிருந்தபோது, ஒநேசிப்போரு, அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக்கண்டு பிடித்தான். கடைசிநாளில் அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தை கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக" என கூறினார் (2தீமோ.1:17,18). ஆம், நீங்கள் இயேசுவின் நாமத்தில் ஒரு சீஷனுக்குத் தரும் ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீருக்கும், பலனில்லாது போகாது! என்றே இயேசு கூறினார். சீஷத்துவ தரமும், உத்தம சகோதர சினேகமும், ஐக்கியமும், சபையின் உயர்ந்த தரமாய் என்றும் நிலைத்திருப்பதாக!*

*– சகரியா பூணன்*

---

## தேவனுக்கு நம்மை 'ராஜினாமா' செய்வதே பரத்தின் வழி!

***நா**ன் கர்த்தரை இலக்காய் வைத்து, முன் சென்ற நாட்களில் 'நேபுகாத்நேச்சாரைப்போல்' மிருகங்கள் மத்தியில் வாழ்ந்ததற்கு ஒப்பான ஓர் தாழ்ந்த நிலைக்கு தள்ளப்பட்டு சுமார் 7 - வருடங்கள் வாழ்ந்தேன். அது ஒரு வீணான வாழ்க்கையைப்போல் தோன்றி னாலும், அதையும் தேவன் தம்முடைய திவ்விய ஞானத்தின்படி 'ஆவிக்குரிய ஆசீர்வாதமாய்' எனக்கு மாற்றித் தந்தார். நான் அனுபவித்த வெறுமை, இருள், பெலனற்ற நிலை ஆகிய இந்த அனுபவங்கள், இதுவரை நான் சந்தித்த எந்த உபத்திரவத்தையும் விட அதிகமானதாய் கண்டேன். என் இருதயத்தின் ஜெபங்கள் அதிக வறட்சியாகவும், பெலனற்றது போலவும் தோன்றியதை, என் ஜெப வாழ்க்கையில் ஒருபோதும் நான் அனுபவித்திடவில்லை!*

*ஆகிலும், என்னுடைய ஜெபங்கள் வீணாய் ஜெபிக்கப்பட்ட தாகவோ, வலிமை குறைந்ததாகவோ மாறவும் இல்லை! நாம் ருசிக்கிறதற்கு ஏற்றபடியும் அல்லது* **விரும்புகிறதற்கு ஏற்றபடியும் இல்லாவிட்டாலும், தேவனோ நமக்கு எது சிறந்ததோ அதைக் கொடுத்து விடுகிறார்.** *இந்த உண்மையை ஆழமாய் உணர்ந்த ஜனங்கள் எவர்களோ, அவர்களுடைய ஜீவியத்தில் "குறை சொல்லுதல்" வெகு சீக்கிரத்தில் தள்ளிவைக்கப்பட்டுவிடும்!*

*உண்மைதான், நமக்கு மரணத்தை சம்பவிக்கச் செய்து, நமக்குள் ஜீவனை வடிவமைக்கிறார்! அதுவே நமக்கு முழு மகிழ்ச்சியும், ஆவிக்குரிய வளர்ச்சியும், இம்மைக்கும் மறுமைக்கும் உள்ள தேவைகளையும் கொண்டு வந்து தருகிறது.*

**ஒரே இரகசியம் என்னவென்றால் "நம்மை முழுவதும், தேவனுக்கு ராஜினாமா (RESIGN) செய்திட வேண்டும்" என்பதுதான். அதாவது, அவர்**

**நம்மில் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை அவர் நம்மில் செய்வதற்கு முழு அடங்கியிருக்கும் ஆவியோடு ஒப்புக்கொடுப்பதேயாகும்!**

*அவ்வாறு ஒப்புக்கொடுக்கும்போது 'நமக்குப் பிரியமானதென்று' சிறிதேனும் கூட வைத்துக்கொள்ளக்கூடாது. இதுவே தேவனுக்கு நம்மை 'ராஜினாமா'* (RESIGN) *செய்வதாகும்.*

*இவ்வாறு* **அவருடைய ஆவியில்** *நாம் வைத்திருக்கும் தூய்மையான முழுவதும் சார்ந்திருக்கும் நிலையே, தேவன் நமக்குத் தரும் ஒவ்வொன்றையும் மிகுந்த ஆச்சரியத்தோடு பெற்றுக்கொள்ள வகை செய்கிறது!*

*நம்முடைய முழு பெலவீனமும் அவருடைய கரத்தில் இருப்பதே, நம்முடைய தாழ்மையின் ஆதாரத்தை நிரூபிப்பதாயிருக்கிறது. ஒரு ஆத்துமா, உண்மையாயிருந்து தன் முழுமையையும் தேவனுடைய கரத்தில் விட்டுக்கொடுத்துவிட்டு, அவருடைய முழு கிரியைகளுக்கும் இணங்க வேண்டும்! அவருடைய கிரியைகள், சுமூகமான செயலாகவோ அல்லது நமக்குள் இருக்கும் ஒன்றை அழிக்கும் செயலாகவோ..... இவ்வாறு எப்படியிருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும்! எவ்வித துன்பமாயிருந் தாலும், அது அவருடைய கரத்தினால் நடத்தப்படுவதாயிருக்க வேண்டும்!* **அவருடைய வலிமையான செயல் ஒன்றே, அவருக்கு பிடித்தமில்லாததை நம்மிடமிருந்து அழித்துவிட முடியும்.** *இவ்வாறு நடைபெறும் அவருடைய வல்லமையான செயலில் நாம் இருக்கும் போது....*

**"யாதொன்றை குறித்தும் குறைசொல்லவோ அல்லது யாதொன்றைக் குறித்தும் 'நமக்கு இலகுவானதை' விரும்புவதோ ஆகிய, நம் சொந்த செயல் நடைபெற்றிட இடம் தரக்கூடாது!"**

*அவர் நம்மிடத்தில் நடத்தும் கிரியைக்கு, அப்படியே 'ஆமென்' என்று கூற பழகிவிட்டால், நித்தியமான சத்தியங்களை நாம் அனுபவிக்கும் இடத்திற்கு நம்மை நடத்திவிடும்! ஆகிலும் அவ்வாறு நம்மை நடத்தும் தேவனுடைய வழிகளை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கவும் கூடும்! ஆனால் நாமோ, அதை ஒருபொருட்டாக எண்ணிவிடக்கூடாது!*

*பொதுவாக ஜனங்கள், தங்கள் ஜீவியத்தை முழுவதும் அவருக்கு ஒப்புக்கொடாமல், "தங்களை எவ்வாறு தேவன் நடத்த வேண்டும்?" என்ற குறியில், தேவனை தங்கள் கையகப்படுத்தி,* **அந்த மகா தேவனை தாங்கள் நடத்தவே விரும்புகிறார்கள்!** *தங்கள் முழு அர்ப்பணத்தில்*

'மௌனமாய்' அவர் நடத்தும் பாதையில் செல்வதற்குப் பதிலாக..... தாங்கள் விரும்பும் வழியை அந்த மகா தேவனுக்கு காட்டுகிறார்கள்! ஆகவேதான், "தேவனிடத்தில் களிகூரும்படி அழைக்கப்பட்ட ஆத்துமாக்கள்" தங்கள் ஜீவகாலமெல்லாம் இந்த மண்ணுக்குரிய சிறுசிறு ஆறுதல்களை மாத்திரமே பெற்றுக்கொண்டு, அதில் தங்கள் ஆத்துமாவை வைத்து, குறுகிய அந்த வட்டத்தில் தங்கள் மகிழ்ச்சியை அடைந்து கொள்ளலாம் என எண்ணி, மாய்கிறார்கள்!

நான் முன் சென்ற கட்டுகளும், நான் அடைந்த நெருக்கங்களும் **உங்களுக்கு** அச்சத்தையும் பீதியையும் கொண்டு வருகிறதோ? அப்படியானால் '**என்னுடைய ஆனந்த பாக்கிய நிலையை**' உங்கள் மனக்கண்கள் காண வேண்டுமென்றே நான் ஜெபிக்கிறேன்! இதுபோன்ற நிலையில் உள்ள நீங்கள், யாதொன்றையும் தேடாமல் '**தேவனை மாத்திரமே தேடுவதற்கு**' **திரும்பி விட்டால்,** எத்தனை நலமாயிருக்கும்! அவரை நான் பிடித்துக் கொள்ள முடியும் என்று நீங்கள் மனுஷீக விருப்பத்தைக் கொள்ளாமல், உங்கள் முழுமையும் அழிந்து "மரித்து தோன்றும் வழியில் சென்றே" நீங்கள் அவரைப் பிடித்துக் கொள்ள முடியும்! ஆவியானவர் நடத்தும் அந்த வழியில் 'உங்களை ஒரு பொருட்டாக' வைத்துத் தேட ஒருபோதும் நாடாதீர்கள்! அதற்குப் பதிலாக, 'நான் ஒன்றும் இல்லாதவன்' என்ற **உங்களை ராஜினாமா செய்த** ஆச்சரியமான வாசஸ்தலத்தில் பிரவேசித்திடவே முழுமனதாய் நாடுங்கள்!

– மேடம் குயான்

---

## யார் தேவனுடைய உண்மையான நண்பன்?

**தே**வனுடைய ஊழியர்கள் என, தங்களை அழைத்துக்கொள்ள பலர் துடித்து நிற்கிறார்கள். தாங்களாகவே தேவனுடைய ஊழியர்களாக மாறிவிட துடிப்பவர்கள், தேவனை தங்களுக்கு ஊழியனாய் மாற்றிக் கொள்ளவே முயற்சிக்கிறார்கள்! இதுபோன்ற வர்கள், தேவனுடைய கிருபையை ஆதாயமாகப் பயன்படுத்திக் கொண்டு, இரட்சிப்பையும் மற்றும் பல அவரது அன்பின் பிரயாசங்கள் அனைத்தையும் **தங்களுக்கே சாதகமாய்** பயன்படுத்த முயற்சிக்கிறார்கள்.

இவர்களும்கூட, தேவனை தங்களுடைய நண்பனாக மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள்.... அதுஏனென்றால், அந்த நண்பன் மூலமாய் தங்கள் சொந்த விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்திடவே யல்லாமல், வேறெதற்கும் அல்ல! 'தனக்காகவே தேவபக்தி' என்ற நிலை மிகவும் கொடியதாகும்.

**உண்மையான நண்பர்களாய் தேவனுக்கு நிலைத்திருப்பவர்கள் 'பாவத்தைக் குறித்த' மிகுந்த கவனத்தை தங்கள் குணாதிசயமாய் பெற்றிருப்பார்கள்! அதை அவர்களும் வெறுப்பார்கள். அது மற்றவர்களிடத்திலிருப்பதையும் வெறுப்பார்கள்!**

*எவ்வித பாவத்தையும் தங்களுக்குத் தாங்களே நியாயப்படுத்திக் கொள்ளமாட்டார்கள்! அதுபோலவே, பிறரிடத்திலுள்ள பாவத்தையும் நியாயப்படுத்திட துணியமாட்டார்கள்! தேவனுக்கு நண்பர்களாய் இருப்பவர்கள், தங்களின் சொந்த பாவங்கள் யாதொன்றையும் மறைக்கவோ அல்லது யாதொரு சாக்குப்போக்கு சொல்லவும் மாட்டார்கள்! அதுபோலவே, பிறருடைய பாவத்தை மூடி மறைத்திடவோ அல்லது அவர்களின் பாவங்களை மறைப்பதற்கு கூறும் சாக்குப்போக்கை ஏற்றுக்கொள்ளவோ மாட்டார்கள். எனவே "பூரணமான பரிசுத்தமே" அவர்களின் இலக்காய் இருக்கும்!*

*தேவனுடைய உண்மையான நண்பர்கள் 'பூரணமானவர்கள்' என நான் கூறுவதில்லை. எப்படியெனில் தன் பெற்றோர்களிடம் உண்மையான அன்பு கொண்ட பிள்ளை, பூரணமான பிள்ளை என்றோ அல்லது பெற்றோர்களிடம் கொண்ட உறவில் தோல்வியே காணாதவர்கள் என்றோ நான் கூறுவதில்லை. ஆனால், அந்த பாசமுள்ள பிள்ளை, தன் மனதில் 'கீழ்ப்படிதல் ஒன்றையே' தனது இலக்காய் எப்போதும் கொண்டிருக்கும். பெற்றோரை நேசிக்கும் பிள்ளை, ஏதாவது ஒரு வகையில் தோல்வியுற்றால், அந்த தோல்வியை எவ்விதத்திலும் நியாயப்படுத்த விரும்பாமல், செய்த தவற்றிற்காக தன் மீதே அதிருப்தி கொண்டு மனந்திரும்ப துடித்து நிற்கும்!*

இவ்வாறு, **'தவறு செய்தோம்' என அறிந்தவுடன் தன்னைத் தாழ்த்துவதற்கு ஆயத்தமாயிருக்கும் மாந்தர்களே** *தேவனுடைய உண்மையான நண்பர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் தேவன் மீது குறை சொல்லி நிற்பதை நீங்கள் காண முடியாது. தன்னுடைய வீழ்ச்சியை தேவனிடத்தில் கூறி, 'அவருக்கு தங்களால் கீழ்ப்படிய முடியவில்லை!' என தங்கள் பொறுப்பை, இலகுவாய் அல்லத்தட்ட மாட்டார்கள். மாறாக, தேவன் தங்களிடம் எதிர்பார்த்த தரம் எவ்வளவு சிறந்தது என உணர்ந்து, தங்களுடைய கீழ்ப்படியாமையைக் குறித்தே வருந்து வார்கள்! தேவன் ஒருபோதும் தன்னுடைய சிருஷ்டிப்பின் மூலமாய் "முடியாதவைகளை கைக்கொள்ள" கட்டளைத் தருவதில்லை.*

*ஒரு தேசபக்தன், தன் நாட்டின் கௌரவத்தையும் அதன் விருப்பத்தையும் மென்மேலும் உயர்த்துவதற்கு ஆர்வம்*

கொண்டதைப் போலவே, தேவனுடைய நண்பனாய் இருப்பவன், தேவனுடைய கனத்தையும் அவரது மகிமையையும் குறித்தே, தன் ஆவியில் வைராக்கியத்தை வெளிப்படுத்தி வாழ்வான்! அவ்வாறு தன் தேசத்தின் கௌரவத்திற்காக ஒன்றை செய்து முடித்தவன் அடைந்திடும் மகிழ்ச்சிக்கு ஒப்பாக, வேறு யாதொன்றிலும் அப்படியொரு மகிழ்ச்சியை வைத்திருக்க மாட்டான்!

**ஆனால் ஏராளமான கிறிஸ்தவர்களோ, தங்கள் நற்பெரையும் தங்கள் சொந்த கௌரவத்தையும் பாதுகாத்திடவே அதிக துடிப்புள்ளவர்களாய் இருக்கிறார்கள்!**

ஆனால், தேவனுடைய சிநேகிதர்களாய் இருப்பவர்களோ, தேவனுடைய கனத்திற்குப் புகழ்ச்சி ஏற்படுவதற்கு முயற்சிக்கும் தங்கள் ஊழியங்களில், அவர்களின் இருதயங்கள் உத்வேகமுடன் துடித்துக் கொண்டிருக்கும்! அவர்கள் எந்த ஆத்துமாக்களின் மீதும் கொண்டிருக்கும் அன்பு, தெய்வ அன்பிற்கு இணையாகவே இருக்கும். 'தேவனுக்கு சமமாய்' வந்து விட்ட அன்பு என எண்ணவில்லை. ஆனால், **தேவன் விரும்பும் இருதயத் துடிப்பை** இவர்களும் பெற்றிருப்பார்கள், என்றே கூறுகிறேன்.

ஒரு மனுஷனுடைய கெட்ட நடக்கையை வெறுத்து, அதே சமயம் அந்த மனுஷனின் ஆத்துமாவை நேசிப்பது என்ற ஓர் தெய்வ பண்பை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒரு கொலைகாரன் தூக்கிலிடப்பட்டு தண்டிக்கப்படும்போது, ஒரு துன்மார்க்கன்கூட அவனுடைய பரிதாப முடிவைக் கண்டு இயற்கையான அனுதாபம் கொண்டிருப்பான்.

**ஆனால், ஒரு உண்மையான தேவனுடைய பிள்ளையோ இருவகை உணர்வுகளை வெளிப்படுத்துவான்! அவனும் தூக்கிலிடப்பட்ட குற்றவாளி மீது அனுதாபம் கொண்டிருப்பான்..... அதே சமயம், தண்டனைக்கு காரணமாயிருந்த அவனுடைய பாவங்கள் மீது அருவருப்பும் கொண்டிருப்பான்!**

இரண்டு விதமான அன்பு உண்டு! 1) பரந்த உள்ளமான அன்பு! இந்த அன்பிற்கு, தான் அன்புகூரும் நபரின் குணாதிசயம் எப்படிப்பட்டது என காணாமல், அவனுடைய துன்பங்களைக் கண்டு வருந்தும் பரந்த அன்பு! தேவனும், இந்த அன்பை பாவிகளாகிய எல்லா மனிதர்கள் மீதும் கொண்டிருக்கிறார். 2) இருதயத்தில் பூரிப்படையும் அன்பு! இந்த அன்பில், ஒரு நபரின் குணாதிசய அங்கீகாரமே மேலோங்கியதாயிருக்கிறது! இதுபோன்ற பூரித்த அன்பை, நீதிமானுக்கு மாத்திரமே தேவன் தருகிறார். இதிலிருந்து விளைவது

*தான், தெய்வ சிநேகம்!*

**விலையேறப்பெற்ற, தனது சிநேகத்தை தேவன் ஒருபோதும் குணாதிசய மிழந்து படுகுழியில் இருக்கும் பாவிகளுக்கு தருவதில்லை. அதுபோன்ற வர்களை அவர் வெறுக்கிறார்! ஆகிலும், மனதுருக்கமுள்ளவரா யிருக்கிறார்! ஆ, தெய்வத்தின் நட்பு எத்தனை மேன்மையாயிருக்கிறது.**

*இந்த இருவித அன்பையும் சமநிலையில் நாடவே, தேவனுடைய சிநேகிதன் விரும்புவான். யார்மீது ஆழமாய் மனதுருக்கம் கொண்டிருக்கிறானோ 'அவனை மாத்திரமே' ஒரு நல்ல கிறிஸ்தவன் கடிந்து பேசுவான். இதை நீங்கள் பொதுவாக கண்டிருக்கலாம், ஓர் அன்புள்ள பெற்றோர் மிகுந்த மனதுருக்கத்தை மனதில் வைத்தே, தன் பிள்ளையை கடிந்துரைக்கும் வார்த்தைகளால் திருத்துகிறார்கள்!*

*இந்த 'இரண்டு அன்பையும்' சமநிலையில் இயேசு வெளிப் படுத்தினார்: அவர் எருசலேமிற்காக அழுதார்! ஆகிலும், அவர்கள் செயலின்மீது கொண்ட பற்றிஎரியும் கோபத்தையும் வெளிப்படுத்தி "எருசலேமே எருசலேமே, தீர்க்கதரிசிகளை கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களை கல்லெறிகிறவளே!" என மனம் பொருமினார் (மத்தேயு.23:37). அவர்களின் பொல்லாத குணத்திற்காக, அதன் விளைவை உணர்ந்தவராய் மனதுருகி அழுதார்! அதேசமயம், அதற்கு இணையாக "அவர்களின் பாவத்தை வன்மையாய் கடிந்து கொண்டார்!" தேவனுடைய இந்த பண்பை பெற்றவன், நிச்சயமாய்* **தேவனுடைய சிநேகிதனாக** *எண்ணப்படுவான். இந்த சமநிலையே நம்மீதும், நம் சபைகளில் காணப்படுவதாக!*

*– சார்லஸ் ஃபின்னி*

---

## "தீவட்டி தொடர்ந்து எரிய" எண்ணெய் சேகரியுங்கள்!

**ஒ***ரு பெரிய மலைச்சாரலான பாதையில், தன் பிள்ளையை தோளில் தூக்கிக்கொண்டு ஒரு தாய் நடந்து பயணம் சென்றாள்! அந்தப் பாதையின் ஓரங்களிலிருந்து பல நிறமான பூக்களைக் கண்ட அந்த குழந்தை, அந்த பூவின் பரவசத்தில், அந்தப் பூக்களைப் பறித்திட, தன் தாயின் மடியிலிருந்து குதித்து குதித்து முயற்சித்தது. அவ்வாறு குதித்தப் பிள்ளை, திடீரென்று தாயின் மடியிலிருந்து தவறி பாறையின் பள்ளத்திற்குள் விழுந்து மரித்து விட்டது! இவ்வாறு எத்தனையோ மதியீனமான மரணங்கள் இந்த உலகத்தில் சம்பவிக்கின்றன! உண்மை என்னவென்றால், அந்தப் பிள்ளையின் முழுஜீவியத்தின் பாதுகாப்பும், அதன் தாயின் மடியில்தான் இருந்தது! அந்த, பல வண்ண நிறமான பூக்களில் இல்லை!*

*சத்தியத்தின் மீது வாஞ்சைக் கொண்ட அநேகர், தாங்கள் முன்னேறி கடந்துச் செல்லும், இதுபோன்ற கவர்ச்சியான இடங்களில் ஈர்க்கப்பட்டு, அதன்மீது தங்கள் முழு மனதையும் வைத்து விடுகிறார்கள்.*

**தங்களுக்கு முழு ஆவிக்குரிய போஷாக்கும், நிரந்தர பாதுகாப்பும் வழங்கிடும் "தாய் போன்ற தேவனுடைய மார்பை" புறக்கணித்துவிட்டு, இந்த உலகத்திற்குள் குதித்து ஜீவனை இழக்கிறார்கள்!**

*நல்ல கனிகளையும்! அழகுள்ள மலர்களையும்! தரும் ஒரு மரத்தை அக்கறையோடு நாம் பேணி பாதுகாக்கவில்லையென்றால், அதுவே* **தானாய் வளரும் காட்டு மரமாய் மாறி,** *தன் அழகையும் பயனையும் இழந்துவிடும்! இதுபோன்ற நிலையே விசுவாச ஜனங்களிடமும் காணப்படுகிறது. அவர்களின் இருதய சிந்தையை வேதவாக்கியத்தின் தியானம் பற்றிக்கொண்டு ஆட்கொள்ளவில்லை. ஜீவ நாடியான "***தேவனோடு உறவுக்கொள்ளும் ஜெபத்தின் தொடர்பையும்***" இழந்து விடுகிறார்கள்! உலகத்தை வெறுக்கச் செய்யும் சிலுவையும் அவர்கள் கண்களுக்கு மகிழ்ச்சியாய் தோன்றுவதில்லை! இதனிமித்தமாய் ஆவிக்குரிய மந்தாரமும், ஆவிக்குரிய தூக்கமும் அவர்களை வஞ்சித்து, தங்களின் பழைய தீமையான பாவப்பழக்கங்களுக்குள் 'தவறி விழுந்து' ஆவிக்குரிய மரணத்தில் செத்துப்போய் விடுகிறார்கள்!*

*பத்து கன்னிகைகள் அனைவருமே, மணவாளனை சந்திக்கச் சென்றது உண்மைதான்! மணவாளனை சந்திக்கச் செல்லும் அந்த பவனியில்,* **தீவட்டியும் எண்ணெயும் அவசியம்** *என்பதை அறிந்து, அவைகளைக் கொண்டிருக்க ஆயத்தமாய் இருந்திருக்க வேண்டும். "தொடர்ந்து எரியும் தீவட்டிக்கு" தேவையான எண்ணெயை இந்த புத்தியுள்ள கன்னிகைகள் சேமித்து வைத்திருந்தார்கள். இந்த புத்தியில்லாத கன்னிகைகளோ, தங்கள் தீவட்டி எரிவதைக் கண்டு, பரவசத்தோடு அந்த பவனியில் முன் சென்றார்கள். புத்தியில்லாத கன்னிகைகள் "கொஞ்சம் ஜீவியத்தைக் கொண்டு" மணவாளனை சந்தித்து விடலாம் என எண்ணி விட்டார்கள். ஜீவியத்தின் குறுகியப் பாதை அல்லது அன்பின் பாதை நெடிய பயணம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். "கொஞ்சமான கிறிஸ்தவ விசுவாசத்தைக் கொண்டு" நித்திய பயணத்தை ஓடி முடித்துவிடலாம் என தவறாய் எண்ணிவிட்டார்கள். மணவாளன் ஏன் தாமதித்தார்? என்ற கேள்விக்கு ஒரே பதில்: "இந்த புத்தியில்லாத கன்னிகைகளின் தீவட்டியின் கொஞ்ச எண்ணெயும் எரிந்துப் போவதற்கே அனுமதித்தார்" என்ற காரணமேயாகும். 'ஒருவரும் கிரியை செய்யக்*

கூடாத இராக்காலத்தின்' இருள் தீவட்டியின் எண்ணெய் முழுவதையும் தீர்த்து விட்டது! அது ஏனென்றால், புத்தியுள்ள கன்னிகைகள் 'சிலுவை எடுத்து எண்ணெய் சேகரிக்கும் கிரியைக்கு' கிரியைச் செய்ய ஏதுவாயிருந்த எல்லா சூழ்நிலைகளுக்குள்ளும் பொறுமையுடன் சிலுவையை சகித்து, 'தொடர்ந்து எரியும் ஜீவியத்திற்கு' தங்கள் இருதயமாகிய எண்ணெய் கலசத்தில், கொஞ்சம் கொஞ்சமாய் போதுமான எண்ணெய் சேகரித்து விட்டார்கள்!

'இனி எண்ணெய் சேகரிக்கலாம்' என ஓடிய புத்தியில்லாத ஸ்திரீகளுக்கு, ஏன் மணவாளன் திடீரென 'நடுநிசியில்' வந்து கதவை பூட்டிவிட்டார்? இழந்துபோன ஜீவிய பயணத்தை, அதன் இடைவெளியை, ஒருவனாலும், பூர்த்தி செய்திட முடியாது! என்பதை நம் யாவரும் அறிய வேண்டும் என்பதற்கேயாகும்!

ஆவிக்குரிய தூக்கம் கொண்டு, உலகத்திற்குள் புறக்கணிக்கப் படாமல், தொடர்ந்து நம் தீவட்டி எரிந்திட விழிப்புடன் நம் இருதயத்தில் எண்ணெய் சேகரிக்கக்கடவோம்! அப்போது மாத்திரமே "மணவாளன் வந்துவிட்டார்" என்ற கூக்குரல் வரும் எந்த நேரத்திலும், நாம் அவரிடத்தில் சேர்ந்திட முடியும்!

– சாது சுந்தர்சிங்

---

## உத்தம ஊழியர்களுக்கே தீங்கு உண்டு!

**வே**தபாரகர் பரிசேயர், ஜனங்களிடமிருந்து வந்தனங்களையும், ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் "விரும்பினார்கள்" என்பதை ஆண்டவர் கடிந்துகொண்டார். உத்தம ஊழியர்கள் அவைகளை விரும்புவதில்லை! அவர்களுக்கு புகழ்ச்சியும் சரிதான், இகழ்ச்சியும் சரிதான். ஆனால், **தேவ ஊழியர்களை மதிப்பதும்** அவர்களிடத்தில் அன்பாயிருப்பதும் தேவமக்களின் கடமை என 1தீமோத்தேயு.5:17 கூறுகிறதே! அப்படி சபை செய்வது, அவர்களுக்கே அது ஆசீர்வாதம்! கர்த்தருடைய ஊழியர்களுக்கு ஓர் காலத்திலிருந்த மதிப்பு இப்பொழுது இல்லை என்பதும், கடைசி காலத்திற்குரிய அடையாளாமேயாகும். அக்காலத்தில், சபையார் தங்கள் ஊழியர்களைக் காண்பார்களானால்: "ஸ்தோத்திரம் ஐயா" என்று பணிந்து வணக்கம் செய்வதல்லாமல், அதிகம் பேசமாட்டார்கள்.

**தேவஊழியர்கள் ஏதாகிலும் விசாரித்தால், ஆணாகிலும் பெண்ணாகிலும் பயபக்தியோடே பதில் சொல்லுவார்கள்.**

ஊழியர்களும், சபையை நேசித்து, ஊக்கமாய் ஊழியம் செய்வார்கள். சபையாருக்கும் ஊழியருக்குமுள்ள சம்பந்தம், தகப்பனுக்கும்

மக்களுக்குமுள்ள சம்பந்தம் போலிருக்கும்! அங்கு ஊழியர்கள், சபை காரியங்களில் ஆவிக்குரிய அதிகாரத்துடன் மனம் குளிர ஊழியம் செய்தார்கள். **கீழ்ப்படியாமையும், முரட்டாட்டமுமான** தொந்தரவுகள் இருந்ததில்லை! கலெக்டர், தாசில்தார் முதலான சர்க்கார் உத்தியோகஸ்தருக்குள்ள மதிப்பைவிட, சபையார் தங்கள் ஊழியர்களை அதிகமாய் மதித்து வந்தார்கள். அந்த அருமையான காலம் இன்று மங்குவது ஏன்? கற்பு ஒழுக்கம் போன்ற உத்தமத்தில் தவறும் ஊழியர்களை சபையோர் கனம் செய்வதில்லை என்பதை விளங்கிக்கொள்ளலாம். ஆனால், சபை மக்கள், கல்வியிலும் சம்பாத்தியத்திலும் உயர்ந்து 'தங்களை ஒரு பொருட்டென்று' மேட்டிமை கொண்டதினால், கனம் செய்யாது இருப்பது துயரமல்லவா?

**அல்லது சத்தியத்தை மறுத்து, மனம்புண்பட்டு தங்கள் ஊழியரை அவமதிப்போரும் உண்டு! அதுவும், சபைக்கு ஏற்படுத்தும் நிந்தையல்லவா?**

காலஞ்சென்ற தாவீது போதகர், தம்மை **ஒரு மந்தைக்கல்** என்று சொல்லுவார். அதற்கு அர்த்தம் என்னவென்று அவரிடம் கேட்டால்: ஊர் மாடுகளை வீடுகளிலிருந்து அவிழ்த்துவிட்டவுடனே, அவைக ளெல்லாம் சேர்ந்து கிராமத்துக்குச் சமீபமாயுள்ள ஓர் இடத்தில் மந்தையாகக்கூடும். அங்கே ஒரு கல் நட்டப்பட்டிருக்கும். அங்கே கூடுகிற மாடுகள் நமைச்சலுள்ள தங்கள் உடம்பை அந்தக் கல்லில் தேய்த்துவிட்டு, மேய்ச்சலுக்குப்போகும்! அதுபோலவே, நான் சபையிலுள்ள பலரும் தேய்க்கும் மந்தைக்கல் போலிருக்கிறேன் என தன் அனுபவத்தைக் கூறிவிட்டு, ....தொடர்ந்து கூறுகையில், இதுபோன்ற நன்றியில்லா மக்களைக்குறித்து தேவனிடம் ஒப்புக் கொடுத்துவிட்டு, நானோ என் ஜீவ காலமெல்லாம் கர்த்தருக்கு மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்தேன்! என்றார்.

ஒரு பெரிய சபையில் பணச்செருக்குள்ள ஒரு கமிட்டி தலைவர் இருந்தார். அவரோ தெய்வ பயமற்றவர்! அவருடைய மனைவி வியாதியாயிருந்தார். போதகர் அந்த அம்மாளைப் பார்க்கும்படி வீட்டுக்குள் பிரவேசித்தபோது, அவர் போதகரைப் பார்த்து: "மனுஷா, இப்போத்தானா உன் கண் திறந்தது? அம்மா வியாதியா யிருக்கிறார்களே, உடனே வந்து பார்க்கக்கூடாதா? நாங்கள் வியாதிப்பட்டால், நீர் வந்து ஜெபம் செய்வது உமது கடமை! நோவு, சாவு என்று வந்தால் அதை விசாரிப்பதே உமது கடமை" என மிரட்டி கூறினார். அந்த போதகரோ ஆவிக்குரிய போதகர். வியாதி நேரத்தில்

'விசுவாசம் குன்றிவிடக் கூடாது' என கூறவே வந்தார்! ஆனால், ஒன்றும் பேசாமல், மிகுந்த வருத்தமுடன் சென்று விட்டார்!

**உத்தம ஊழியர்கள் சகலத்தையும் சகிப்பவர்கள் என்பதினாலே, சபையார் அவர்களுக்கு விரோதமாக எதையும் பேசலாம், எதையும் செய்யலாம் என்று துணிவு கொண்டிருப்பது தெய்வ பயமற்ற நிலை! அந்த ஊழியனின் பொறுமையைக் கோழைத்தனமென்றும் இந்த கூட்டத்தார் எண்ணிக்கொள்ளுகிறார்கள்!**

நாமோ, ஆண்டவரோடு ஏக சிந்தைக் கொண்டவர்களாய், தீமையைச் சகித்துக்கொள்ள வேண்டுமென்று நாம் போதிப்பதற்கு நிரூபணமாய் இருக்க வேண்டும்! உத்தம ஊழியத்தில் பாடுகள் இருப்பதுபோலவே, தேவன் மூலமாகவும், தேவ மக்கள் மூலமாகவும் அவர் அருளும் ஆறுதல்களும் உண்டு என்பது நிச்சயம்! ஆ, அது ஒன்றே அவரது தாசர்களுக்குப்போதும்!!

– பரமானந்தம் ஐயர்

---

## 'பெருமையில் வீழ்ந்தவனை' உண்மையுள்ளவன் தூக்கி விடுவான்!

**ந**ம் ஜீவப்பாதையில் அபாயங்களைக் கடந்து செல்லும்போது, கர்த்தர் நம்மைக் காத்த விதத்தைத் 'திரும்பிப் பார்த்து' பெலனடைவது தேவன் நமக்குத் தந்த ஒரு வழியாயிருக்கிறது! ஒரு பாடல் வரியைப் போல் "கடந்த நாளில் நீர் எனக்கு காட்டிய உமது அன்பைக் குறித்த தியானமே, பின்வரும் நாளில் நான் வீழ்ந்து விடுவேனோ? என்ற அச்சத்தை, என் உள்ளத்திலிருந்து எடுத்துவிட்டது!" என்ற வாசகம், நமக்கு மிகுந்த உற்சாகமளிக்கிறது. பழைய ஏற்பாட்டில் சாமுவேல் தீர்க்கதரிசி ஓர் கல்லை நாட்டி **'எபினேசர்'** என பெயரிட்டான். அதற்கு அர்த்தம் 'இம்மட்டும் காத்தவர், இனிமேலும் என்னைக் காப்பார்!' என்பதேயாகும். இதுவே நன்றியுள்ள இருதயத்தோடு நாம் திரும்பிப் பார்த்து, விசுவாசத்தை எதிர்காலத்திற்கென பெற்றுக்கொள்ளும் இரகசியமாகும்!

இப்போது கிறிஸ்தியான் எழுந்து நின்று "கர்த்தருடைய வெளிச்சத்தைக் கொண்டு நான் இருளை கடந்துச் செல்வேன்" என அறிக்கைச் செய்து முன்சென்ற கிறிஸ்தியான், ஒரு குகைக்குள் நுழைந்தான்! அந்த குகையில் **இரண்டு அரக்கர்கள்** இருந்தார்கள். ஒரு அரக்கனுக்குப் பெயர் 'கள்ளமார்க்கம்'. இந்த கள்ள மார்க்கமே கிறிஸ்தவர்களை உபத்திரவத்திற்குள் நடத்தியது. உதாரணமாய் "ரோம சாம்ராஜ்யமும் அவர்களைப் போன்ற மற்ற கிறிஸ்தவரல்லாத மார்க்கங்களும் கிறிஸ்தவர்களைத்" துன்புறுத்தின. இரண்டாவது

*அரக்கன் யாரென்றால் 'கிறிஸ்தவர்கள் என பெயர் கொண்ட அரக்கன்' இவர்களும் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினார்கள். அது ரோம கத்தோலிக்கர்களோ அல்லது புராட்டஸ்டண்ட் பெயரளவு கிறிஸ்தவர்களோ.... இன்னமும் இதுபோன்ற கிறிஸ்தவ மார்க்கத்தார்களே, உத்தம கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்கள். சுமார் கி.பி.1500-வது ஆண்டுகளில், இவர்கள் 'தங்களைப் போன்ற மார்க்க கிறிஸ்தவர் அல்லாதவர்களை' கொலைச் செய்தார்கள். ஒரு கிறிஸ்தவ சபையிலுள்ள ஒருவன், வேறொரு கிறிஸ்தவ ஸ்தாபனத்தி லுள்ள மற்றொருவரை வழக்கு மன்றத்தில் நிறுத்துவான்! இவ்வாறாக பல்வேறு துன்பங்கள் 'பெயர் கிறிஸ்தவர்கள் மூலமாக' உண்மை கிறிஸ்தவர்களுக்குச் சம்பவித்தது!*

**இந்த இரண்டு அரக்கர்களுமே, 'புறஜாதியார்கள்' என்ற பெயருக்கு உரியவர்கள். முதலாவது அரக்கன் 'கிறிஸ்தவரல்லாத' அரக்கன்! இரண்டாவது அரக்கன் 'கிறிஸ்தவத்தைக் கொண்ட' அரக்கன்! ..... இவர்கள் கிறிஸ்துவை அறியாமலே கிறிஸ்தவர்கள் என சொல்லிக் கொண்ட 'புறஜாதிகள்!'.**

*கிறிஸ்தியான் அந்த குகையில், ஒருவன் தன் தலையில் சிலுவை சின்னம் அணிந்த கிரீடத்துடன் ஒருவனைக் கண்டான். அவன் அநேகமாக கத்தோலிக்க பிஷப்போல காட்சியளித்தான்! அவன் கிறிஸ்தியானைக் கண்டு ஆத்திரமடைந்து, பல கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தியதைப் போலவே கிறிஸ்தியானைப் பார்த்து "உனக்கு எவ்வளவு தைரியம் இந்த இடத்திற்கு வந்து விட்டாய்? உன்னை எரித்து அழிக்க வேண்டும்" என வெகுண்டு பேசினான். சுவிசேஷத்தை அறிவித்ததினிமித்தமே* **மோட்ச பயணம்** *எழுதிய ஜான் பனியன் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். ஆனால், அச்சமயத்தில் கிறிஸ்தியான் என்ன செய்தான்? அவன் தைரியமுள்ளவனாய் கடந்துச் சென்றான்! ஆத்திரமாய் பேசிய 'பெயர் கிறிஸ்தவ தலைவனோடு' வாக்குவாதம் செய்து தன் நேரத்தை வீணடிக்க கிறிஸ்தியான் விரும்பவில்லை. எனவே மிகுந்த சாந்தத்துடன், தான் நம்பியிருந்த தேவனை சார்ந்து, முன்னேறிச் சென்றான்!*

*அவன் முன்னேறிச் சென்றபோது, திடீரென்று வேறொருவன் தனக்கு முன்பாக சென்று கொண்டிருந்ததைக் கண்டான். ஏற்கனவே, அந்த இடுக்கமான வழியை காப்பவனிடத்தில், கிறிஸ்தியான் ஒரு கேள்வியை முன்பே கேட்டிருந்தான். "சற்று முன்பு யாராவது இந்த வழி சென்றார்களா?" எனக் கேட்க, அதற்கு அந்த காவலாளி "ஆம், ஒருவன் சற்று முன்பு சென்றான்" என பதில் கூறினார். அந்த நபரை*

*கிறிஸ்தியான் ஆர்வமுடன் தேடிப்பார்த்து, இப்போது அவனைக் கண்டு கொண்டான். முன்சென்ற அந்த சகோதரன் பெயர் "**உண்மையுள்ளவன்**" என்பதாகும். பரமதேசத்தை நோக்கிச் சென்ற மற்றொரு பிரயாணியே, இந்த உண்மையுள்ளவன்! கிறிஸ்தியான் உற்சாகத்துடன் "சகோதரனே சற்று நில்! இதோ நானும் உன்னோடு சேர்ந்துக் கொள்கிறேன்" எனக் கூறினான்.*

**அதற்கு உண்மையுள்ளவன் "நான் யாருக்காகவும் என் பயணத்தை தளர்த்தப் போவதில்லை" எனக்கூறி முன்சென்றான். பின்னால் நின்று கொண்டு ஒருவர் கூப்பிட, அதற்கு நம்முடைய பயணத்தை தாமதிப்பது ஓர் நல்ல கிறிஸ்தவமில்லை!**

*அந்த உண்மையுள்ளவன் "நீ என்னைத் தொடர்ந்து என்னோடு சேர்ந்து கொண்டால், சரிதான். ஆனால் என் முன்னேற்றத்தை சற்று நிறுத்தி, உன்னையும் சேர்த்துக் கொள்வதற்கு, என் பயணத்தை தாமதிக்க மாட்டேன்" என பதில் உரைத்தான். அதுவே, உத்தம கிறிஸ்தவர்களாகிய நாம் யாவரும் வைத்திருக்க வேண்டிய ஓர் சாட்சியான பதிலாகும்! அரை-குறை இருதயம் கொண்டவர்களுக்காக என் ஓட்டத்தை தளர்த்தாமல், அந்த இடைவெளியை அவர்களாக வைராக்கியமாய் முன்னேறி வந்தால் மாத்திரமே, நாம் சேர்ந்து பயணம் மேற்கொள்ள முடியும். இந்த பதிலைக் கேட்டவுடன், கிறிஸ்தியான் தன் முழு பெலத்தையும் கொண்டு, அவனை நோக்கி ஓடினான்!*

*அப்படி ஒரு ஓட்டத்தை ஓடி, உண்மையுள்ளவனைத் தாண்டி முன்னேறினான். அச்சமயத்தில் கிறிஸ்தியான் "இந்த சகோதரனை விட முன்னேறி ஓடி விட்டேன்" என்ற பெருமையின் சிந்தைக்குள் அகப்பட்டு விட்டான்! பெருமை கொள்ளும்போது என்ன நேரிடும்?* **'வீழ்ச்சிக்கு முன்னானது பெருமை'** *என உலகத்தின் பழமொழி கூட உண்டு! அவ்வாறாகவே கிறிஸ்தியான் வீழ்ச்சியடைந்து விழுந்தான். பெருமை, ஒருவனை எப்போதும் வீழ்ச்சியடையச் செய்யும்! எந்த சகோதரனை அற்பமான சகோதரனாய், தன் பெருமையில் எண்ணினானோ, இப்போது அந்த சகோதரன், கரம் நீட்டி தூக்கி விட்டான்! ஆம்* **'உண்மையுள்ளவன்'** *முன்வந்து, அவனுக்கு உதவினான். இதனிமித்தமே, நாம் எப்போதும் 'கர்த்தரோடு ஒருமனம் கொண்ட' ஒரு சகோதரனைக் கண்டால், அவனை பெற்றுக்கொண்ட ஐக்கியத்திற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும்!*

*– மோட்ச பயணம் (சகரியா பூணன் விளக்க உரை)*

## 'அன்பின் பெருவெள்ளமாய்' பாய்ந்திடக்கடவோம்!

*நமது அருமை இரட்சகர், மாயமற்ற இருதயத்திலிருந்து புறப்படும் ஜெபத்தையே கேட்கிறார்! "தன் அன்பின் தாழ்ச்சியை" நேர்மையாய் ஜெபிக்கும் மாயமற்ற இருதயம்! அந்த ஜெப வேளையில் அவர் அருளுவதே, கிருபையின் மேல் கிருபை! அதாவது, கிருபையைத் தொடர்ந்து இன்னும் கிருபை! இது அவருடைய பரிபூரணமும் ஒப்பில்லாததுமான ஈவு! இந்த ஆச்சரியமான பொக்கிஷத்தை, தம்மிடத்தில் அன்புகூருகிறவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையோடு, நமக்கு ஆறுதலுண்டாக எழுதிவைத்திருக்கிறார்! இந்த கிருபை, நாம் அனுபவிக்கக்கூடாத பொக்கிஷ பொருளல்ல. அது தேவன் 'நமக்குள்' செய்கிற கிரியை! 'வெளித்தோற்ற' ஆசீர்வாதமே கிருபையென கொண்டாடுபவர்கள், ஆவிக்குரியவர்கள் அல்ல! நொறுங்குண்டு, தெய்வ அன்பை நாடுபவர்களுக்கு, பக்கபலமாய் தேவன் அருளுவதே அந்த கிருபை! அது நமது நினைவிலும் சித்தத்திலும் "நம் ஜெபத்தை அனுகூலமாக்கி" கர்த்தர் செய்கின்ற கிரியை!*

**"தேவன் அன்பாகவேயிருக்கிறார்" என்ற உண்மையை ஒவ்வொநாளும் நிலைநிறுத்தி, அவரது தெய்வீக அன்பு நமக்கு பாக்கியமுள்ள பொக்கிஷமாய் மாறி, அந்த அன்பின் ஊற்றிலிருந்து பாயும்படி செய்கிறோம். அன்பை சிநேகிக்கும் யாவருக்கும் இந்த சுதந்திரம் உண்டு!**

*வற்றிப்போன ஒரு ஆறு, உயர்ந்த மலைச்சிகரத்திலிருந்து பொழியும் தண்ணீரை சுதந்தரித்துக் கொள்ளுகிறது. அந்த தண்ணீர் இந்த ஆற்றிலிருந்து உண்டாகவில்லை. அந்த ஆறு, மலையிலிருந்து வரும் தண்ணீரை மாத்திரமே வாங்குகிறது! அதினாலே அதின் பண்டசாலைகள் நிரப்பப்படுகிறது. அதின் தடாகங்கள் நிரம்பி வழிவதால் நிலத்திற்குச் செழிப்பும் ஆசீர்வாதமும் உண்டாகிறது. இவ்வாறே நமது ஜீவியமும் இருந்திட வேண்டும்! இவ்வாறு, நாம் மற்றவர்களுக்கு உதவியாயிருக்கும்படி, அன்பின் நிறைவான சந்தோஷத்தை நமது பண்டசாலையிலிருந்து, தெய்வ அன்பின் வெள்ளத்தால் நிரப்பப்பட்டு வழிந்தோடச் செய்கிறோம்.*

**"உம் அன்பைத் தாரும்!"** *என நாம் கிருபாசனத்தண்டைக்குச் சென்று ஜெபிக்கும் ஒவ்வொரு நேரத்திலும், நாம் வேண்டிக்கொள்ளு கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய், நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக!*

*– ஏமி கார்மைக்கேல்*



# தாமஸ் அப்போஸ்தலன்,

## என் மனதார "குருவுக்காக பலியானேன்!"

(AD 34)

"என்ன? நமது குரு உயிர்த்தெழுந்து, பூட்டிய அறைக்குள் நடந்து வந்தாரா?" என வியந்தான் இயேசுவின் சீஷன் தாமஸ். சீஷர்கள் அனைவரும் தோமாவின் கேள்விக்கு "ஆமாம்" என தலையசைத்தனர். அதற்கு தோமா "அப்படியானால் நீங்கள் பார்த்தது ஒரு ஆவிதான், இயேசு அல்ல" என மறுத்துவிட்டார். மற்ற சீஷர்களோ "இல்லை தோமா, அவர் சிலுவையில் அறையப்பட்ட தனது காயங்களை எங்களுக்கு காண்பித்தார். எங்கள் இருதயம் மனப்பூர்வமாய் அவரை விசுவாசித்தது. நீ எங்களோடு இருந்திருந்தால் நீயும் கண்டிப்பாய் விசுவாசித்திருப்பாய்" என உருக்கத்துடன் கூறினார்கள். ஆனால் தோமாவோ தொடர்ச்சியாக மறுத்து "நீங்கள் அவரை தொட்டு பார்த்தீர்களா? இல்லையே! அப்படியிருக்க நீங்கள் பார்த்தது 'ஆவி இல்லை' என எப்படி நிரூபிக்க முடியும்? நீங்கள் எதை வேண்டுமானாலும் விசுவாசியுங்கள். ஆனால் அவரது சிலுவை காயங்களை நான் தொட்டுப் பார்த்தால் ஒழிய, நம்ப மாட்டேன்!" என கூறினார். ஒருவாரம் கழித்து "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக" எனக் கூறி, இயேசு மீண்டுமாய் தன்னை வெளிப்படுத்தி, தோமாவைப் பார்த்து "உன் விரல்களை நீட்டி என் காயங்களை தொட்டுபார்! அவிசுவாசம் கொள்ளாதபடி விசுவாசம் கொண்டிரு" என கூறியதும்.... தோமா அவரை தொட்டுப் பார்க்காமலே, இயேசுவின் பாதத்தில் விழுந்து "என் ஆண்டவரே! என் தேவனே!" எனக் கூறி, இயேசுவின் மீதுகொண்ட உத்தமத்தை உறுதிப்படுத்தினார். **அதன்பிறகு தோமா இயேசுவை ஒருபோதும் சந்தேகிக்கவில்லை.**

சுவிசேஷத்தை அறிவிக்கும்படி பல நாடுகளுக்குச் செல்ல இயேசு சீஷர்களை வழிநடத்தியபோது, தோமாவை வட ஆப்பிரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் போக கட்டளையிட்டார். சற்று தயங்கிய தாமஸ், பின்பு தன் எஜமானனின் கட்டளைக்குப் பணிந்து தன் ஊழியத்தை சீரும் சிறப்புமாய் செய்தார். வட ஆப்பிரிக்கா ஊழியத்தை முடித்து தென்னிந்தியாவின் கேரள மாநிலத்தில் ஊழியம் செய்து, அங்கு இயேசுவின் நாமத்தில் **பல அற்புதங்கள் செய்தார்.** பின்பு சென்னை அருகிலுள்ள ஒரு மலை ஜாதியினர், சூரிய தேவதையை வணங்கியதைக் கண்டு அவர்களுக்கு இரட்சகர் இயேசுவை அறிவித்தார். அச்சமயத்தில் சூரிய தேவதை பூசாரி கோபமடைந்து தோமாவை "எரி சூளையில்" போடும்படி செய்தார். தோமா இன்னமும் எரிசூளையில் உயிரோடு நிற்பதைக் கண்டு, கொலை வெறியில் ஈட்டிகளையும், குத்து வாள்களையும் தோமாவை நோக்கி வீசும்படிச் செய்தார்! ஒரு ஈட்டி தோமாவின் மார்பில் ஆழமாய் பதிந்து இரத்த வெள்ளத்தில் தன் குருவின் மேன்மையான பணிக்கு பலியானார்! அவர் மரித்த அங்க அடையாளத்தின் உடல் பகுதிகள் "St.தாமஸ் பெஸ்லிகா" சென்னை மயிலாப்பூர் சபையில் இன்று வரை நினைவாக வைக்கப்பட்டுள்ளது.

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## 'விசுவாசத்தின் தீரமே' நிரந்தர பெலன் கொண்டது!

ஏமி கார்மைக்கேல் என்ற காருண்ய அம்மாள், தான் நிறுவிய திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள அவரது டோனாவூர் ஐக்கிய கூட்டத்தின் தேவைகளுக்காகக் கர்த்தரிடம் ஜெபித்து, ஜெபித்து பண சம்பந்தமான காரியங்களிலும் இதர காரியங்களிலும் ஆரம்ப நாட்கள் துவங்கி, அதிசயமான ஆசீர்வாதங்களைத் தேவனிடமிருந்து பெற்று வந்தார்கள்! அவர்களின் ஒவ்வொரு ஜெபமும் தப்பாமல் விடை பெற்று வந்தது. ஒரு சமயம் அவர்கள் தனது ஸ்தாபனத்தின் ஒரு மிக அத்தியாவசியமான பணத்தேவைக்காக அதிக உருக்கமாக ஜெபித்து வந்தார்கள். குறிப்பிட்டதொரு நாளில் அந்தப் பணத்தை அந்த நாளின் தபாலில் அம்மையார் திட்டமாக எதிர்நோக்கினார்கள்.

அந்த நாளின் கடிதங்களடங்கிய தபால் பை வந்து சேர்ந்தது. பை திறக்கப்பட்டுக் கடிதங்கள் கொட்டப்பட்டன. ஆனால் அம்மையார் எதிர்பார்த்த பணத்திற்கான கடிதம் எதுவும் அதிலில்லை. அது அவர்களுக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது. எனினும் அம்மையார் சற்றும் மனம் தளராமல் **"என் ஆண்டவர் என்னை ஒருக்காலும் ஏமாற்றமடையப் பண்ணமாட்டரே"** என்ற உறுதியான விசுவாசத்துடன், தபால் பையைத் திரும்பவுமாக நன்கு உதறும்படிச் சொன்னார்கள். என்ன ஆச்சரியம்! பையினுள்ளிருந்து கடைசியாக ஒரு கடிதம் கீழே விழுந்தது. அந்த கடிதத்தினுள் அம்மையார் எதிர்நோக்கிக் கொண்டிருந்த குறிப்பிட்ட தொகைக்கான நன்கொடை செக் இருந்தது. அதைக் கண்ணுற்ற அவர்களின் உள்ளம் தேவ அன்பால் பொங்கி வழிந்து, கண்கள் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கிற்று!

**ஜெபத்திற்கும், விசுவாச ஜெபத்திற்கும் ஏராளமான வித்தியாசம் உண்டு!** உங்கள் ஜெபத்தில் 'கடுகளவு' விசுவாசம் போதும்! அது, மலையையே பெயர்த்திடும்! என இயேசு கூறினார். விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்படுவான்! ஆம், அந்த விசுவாசம் இரட்சகரிடமிருந்து பெறும் பாவமன்னிப்பு, புதுவாழ்வு மாத்திரமல்ல.... அவன் வாழ்வின் அனைத்து தேவைக்கும் இந்த விசுவாசம் கைகொடுக்கும்! வாலிபனே, நீயும் அந்த அம்மையாரைப்போல், மற்றும் உள்ள எண்ணற்ற தேவ தாசர்களைப்போல், விசுவாச தீரனாக மாற, உன்னை இரட்சகர் பாதத்தில் சமர்ப்பணம் செய்திடு!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.